**<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>**

**<u>சி.சி. 186/2019</u>**

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ம் நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 13வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ்குமார் | வயது | 35 |
| த.பெ.(அ)க.பெ. | குப்புசாமி | தொழில் | மேஸ்திரி |
| ஊர்/பணிபுரியுமிடம் | பாப்பானூர் மேடு | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u>

(1) நான் பாப்பானூர்மேடு கிராமத்தில் வசிக்கிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். கடந்த 2018ம் வருடம் ஆகஸ்ட்டு மாதம் தேதி நினைவில்லை ஒருநாள் மாலை 5.00 மணியளவில் நான் எனது வீட்டிடம் இருந்த போது குரிசிலாப்பட்டு காவல் நிலைய போலீஸார் அங்கு வந்து அன்றைய தினம் காலை 9.30 மணியளவில் நடந்த விபத்திற்கு வரைபடம் வரைந்து ஆவணங்கள் தயார் செய்தார்கள். அப்போது என்னையும் எங்கள் ஊரை சார்ந்த வெங்கடேசன் என்பவரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். நாங்களும் சாட்சியாக இருந்தோம். அப்போது போலீஸார் எங்கள் முன்பாக மகஜர் தயார் செய்து அதில் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

சம்பவம் நடந்த போது நான் எங்கள் வீட்டில் இருந்தேன். போலீஸார் நடந்த பின்பு அங்கு வந்தார்கள். மேற்படி சம்பவத்தை குறித்து போலீஸார் என்னிடம் கேட்டார்கள், நான் அதனை நேரடையாக பார்க்கவில்லை என்று சொன்னேன். அங்கு வந்து விசாரணை செய்ததற்காக போலீஸார் ஒருசாட்சி கையொப்பம் போடச்சொன்னதால் போட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் பிராதான சாலை என்றால் சரிதான். நான் கையெழுத்து எனதுவீட்டு அருகில் போட்டேன் என்றால் சரிதான், என் வீடு ரோட்டின்

பக்கத்தில் தான் உள்ளது. போலீஸார் நாங்கள் ஆவணம் தயார் செய்ய வேண்டும் என்றும், அதற்கு எங்களை ஒரு சாட்சியாக இருக்க வேண்டும் என்று நான் கையொப்பம் போட்டேன் என்றாலும் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் போட்டேனா என்றால் தற்போது நினைவில்லை. போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை= இல்லை